# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024
# பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி **வணிகவியல்** மதிப்பெண்கள்:90

## பகுதி - அ

I சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதவும். 20x1=20

1. வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பதை ______ என்பர்.
அ) ஒழுங்கு ஆ) பயன்பாடு இ) வேலைப் பகிர்வு ஈ) சமத்துவம்
2. பின்வருவனவற்றுள் எது முக்கியபணிகள் அல்ல ?
அ) ஒழுங்கமைத்தல் ஆ) பணியமர்த்துதல் இ) முடிவெடுத்தல் ஈ) திட்டமிடுதல்
3. NSEI தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
அ) 1990 ஆ) 1992 இ) 1998 ஈ) 1997
4. பணச் சந்தையில் முக்கிய பங்காற்று அமைப்பு ______
அ) மைய வங்கி ஆ) பாரத ஸ்டேட் வங்கி இ) வணிக வங்கி ஈ) இந்திய ரிசர்வ் வங்கி
5. நம்பிக்கையுள்ள வணிகர் என்பவர் ______
அ) காளை ஆ) கரடி இ) மான் ஈ) வாத்து
6. மனித வள மேலாண்மை ______ உறவினை நிர்ணயிக்கிறது.
அ) முதலாளி, தொழிலாளி ஆ) முதல்வர், முகவர்
இ) அக, புற ஈ) உரிமையாளர், வேலைக்காரன்
7. பொருத்தமற்ற விண்ணப்பதாரரை நீக்குவதற்கான செயல்முறை ______ என அழைக்கப்படுகிறது.
அ) நேர்காணல் ஆ) தேர்வு இ) தூண்டுதல் ஈ) ஆட்சேர்ப்பு
8. பயிற்சி பெறுபவர் உயர் அதிகாரி அல்லது மூத்த தொழிலாளர்கள் மூலம் பயிற்சியை பெறும் முறை
அ) புதுப்பிக்கும் பயிற்சி ஆ) பங்கேற்று நடித்தல் முறை
இ) தொழிற் பயிற்சி முறை ஈ) தொழிற்சாலைக்குள் பயிற்சி முறை
9. பங்கு பரிவர்த்தனை சந்தை இவ்வாறு அழைக்கப்படுகிறது.
அ) களச்சந்தை ஆ) உள்ளூர் சந்தை இ) பத்திரங்களின் சந்தை ஈ) தேசிய சந்தை
10. சந்தையில் உயர் நிலையில் இருப்பவர்
அ) வாடிக்கையாளர் ஆ) விற்பனையாளர்
இ) மொத்த விற்பனையாளர் ஈ) சில்லறை விற்பனையாளர்
11. தூய சில்லறை விற்பனையாளர் ______ என அழைக்கப்படுபவர்
அ) வியாபாரிகள் ஆ) நடவடிக்கை தரகர்கள்
இ) சந்தை உருவாக்குநர்கள் ஈ) முகவர்கள்
12. நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார் ?
அ) ரால்ப் நேடர் ஆ) ஜவஹர்லால் நேரு இ) மகாத்மா காந்தி ஈ) ஜான். எப். கென்னடி
13. மாநில நுகர்வோர் பாதுகாப்பு சபையின் தலைவர் யார் ?
அ) நிதி மந்திரி ஆ) முதலமைச்சர்
இ) உயர் நீதிமன்றத்தின் நீதிபதி ஈ) மேலே குறிப்பிட்ட எதுவும் இல்லை
14. சரக்கு விற்பனை ஒப்பந்தத்திற்கு எது முக்கிய உறுப்பாக இருக்கிறது ?
அ) விலை ஆ) இருதரப்பினர் இ) சொத்துரிமை மாற்றம் ஈ) அனைத்தும்
15. மாற்றும் முறை ஆவணச் சட்டம் 1881 பிரிவு 6 எதைப் பற்றி இயம்புகிறது ?
அ) காசோலை ஆ) கடனுறுதிச் சீட்டு இ) மாற்றுச் சீட்டு ஈ) மேற்கூறிய எதுவும் இல்லை
16. கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளில் எது வணிக பணியை சார்ந்தது ?
அ) திட்டமிடல் ஆ) வாய்ப்பை கண்டறிதல் இ) ஒருங்கிணைப்பு ஈ) கணக்கியல் பணி
17. கீழ் குறிப்பிட்டுள்ள எது காலம் தாழ்த்தும் பழமை விரும்பி தொழில் முனைவோருக்குப் பொருந்தாது ?
அ) பழமை பேணுவது ஆ) ஐயப்படுவது இ) மாற்றிக் கொள்வது ஈ) இடர் வெறுப்பது
18. புதிது புனைதல் மற்றும் தொழில் முனைவோர் கலாச்சாரத்தை ஊக்குவிக்க இந்திய அரசு ______ முயற்சிக்கிறது.
அ) அடல் இன்புவேஷன் சென்டர்ஸ் (AIC)
ஆ) விஞ்ஞான அடிப்படையில் அதிகாரமளித்தல் மற்றும் அபிவிருத்தி (SEED)
இ) பெண்களுக்கு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டத்திற்கான ஆதரவு (STEP)
ஈ) அடல் புதுமை புகுத்தல் திட்டம் (AIM)

19. ஒரு நிறுமம் தனது பதிவு அலுவலகம் அமைந்துள்ள இடம் பற்றிய அறிக்கையை ______ நாட்களுக்குள் நிறுமப் பதிவாளருக்கு தெரிவிக்க வேண்டும்.
அ) 14 நாட்கள் ஆ) 21 நாட்கள் இ) 30 நாட்கள் ஈ) 60 நாட்கள்
20. நிறுமத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் ______ க்கு பேச உரிமை இல்லை.
அ) தணிக்கையாளர் ஆ) பங்குனர் இ) பகராள் ஈ) இயக்குநர்

## பகுதி – ஆ

7x2=14

**II எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் வினா எண் 30 க்கு கட்டாய வினா**

21. செயலூக்கமளித்தல் என்பதன் பொருள் தருக.
22. உட்புறச் சூழல் என்றால் என்ன ?
23. பல்வேறு அடையாள ஆதாரங்கள் யாவை ?
24. கடன் பத்திரங்கள் என்றால் என்ன ?
25. தூய உலோக சந்தை என்றால் என்ன ?
26. நுகர்வோர் என்பவர் யார் ?
27. காசோலை என்றால் என்ன ?
28. தனியார் மயமாக்கல் என்றால் என்ன ?
29. தெளிவான தொழில் முனைவோருக்கு உதாரணம் தருக.
30. ஆட்சேர்பின் படிநிலைகளை பட்டியலிடுக.

## பகுதி – இ

7x3=21

**III எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் வினா எண் 40 க்கு கட்டாய வினா**

31. மேலாண்மையை நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்துக. (ஏதேனும் மூன்று மட்டும்)
32. காளை மற்றும் கரடி – விளக்குக.
33. தேசிய ஆணையத்தின் உறுப்பினர்கள் பற்றி விவரி.
34. கருவூல இரசீதின் வகைகளை விவரி.
35. ஆட்சேர்ப்பு முறையில் கோரப்படாத விண்ணப்பங்கள் என்றால் என்ன ?
36. சந்தையிடுகையின் நோக்கங்கள் யாவை ?
37. தனியிடச்சந்தை பற்றி விளக்குக.
38. செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன ?
39. மன அழுத்த நேர்காணல் என்றால் என்ன ?
40. ஜன்தன் ஆதார் மொபைல் திட்டம் – விளக்குக.

## பகுதி – ஈ

7x5=35

**IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்**

41. அ) வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகளை விளக்குக. *(அல்லது)*
ஆ) இயக்குனரின் தகுதிகள் பற்றி கூறுக.
42. அ) மூலதன சந்தையின் சிறப்பியல்புகளை விவாதிக்க. *(அல்லது)*
ஆ) மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சினைகளை விவரி.
43. அ) செபியின் பணிகளை விவரி. (ஏதேனும் 5) *(அல்லது)*
ஆ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி.
44. அ) ஆட்சேர்ப்பு முறைக்கும் தேர்ந்தெடுக்கலுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை விவரி.? *(அல்லது)*
ஆ) நுகர்வோரின் பொறுப்புகள் யாவை ? (ஏதேனும் 5)
45. அ) சந்தை எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது ? விவரி. *(அல்லது)*
ஆ) பணி வழி பயிற்சிக்கும் பணிவழியற்ற பயிற்சி முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?
46. அ) பலவகையான நிறுமக் கூட்டங்களை விளக்குக. (ஏதேனும் 5) *(அல்லது)*
ஆ) எல்பிஜி (LPG) –யின் சிறப்பு அம்சங்களை விளக்குக. (ஏதேனும் 5)
47. அ) விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படை கூறுகளை விளக்குக. *(அல்லது)*
ஆ) பங்குகளுக்கும் கடனீட்டு பத்திரங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை ?

***/***